**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 59 of 2020

Depositions of PW -8 witness for ________

Prosecution
Defence
Court

Name : திரு. ஜெகநாத்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of March** 2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது ஈரோடு மாவட்டம், வெள்ளோடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2020 ம் ஆண்டு கோவை மாவட்டம் சூலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது காவல் நிலையம் நிலுவையில் இருந்த வழக்கு கோப்புகளை பார்வையிட்டபோது காவல் உதவி ஆய்வாளர் திரு.சுல்தான்இப்ராஹிம் என்பவர் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.945/2019, சட்டப்பிரிவு 379 இதச வழக்கின் கோப்புகளை பார்வையிட்டு வழக்கில் எதிரி கைது செய்யப்பட்டு எதிரியிடமிருந்து வழக்கு சொத்தானது கைப்பற்றப்பட்டிருந்தது.

2. மேற்படி வழக்கில் உதவி ஆய்வாளர் திரு.சுல்தான்இப்ராஹிம் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து 26.06.2020 ம் தேதியன்று எதிரி பரமேஸ்வரன், த/பெ. ஆறுமுகம் என்பவரின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனில் வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் அவர்கள் வழக்கு கோப்பினை பார்வையிட்டு அதன் பின்னிட்டு தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் TN 64 K 4621 என்ற ஆம்னி வேனை கைப்பற்றியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி பதிவு எண் போலியாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். TN 64 K 4621 பதிவு எண் போலியான பதிவு எண் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு நான் எனது புலன் விசாரணையில் மேற்படி பதிவு எண் யாருக்கு சொந்தமானது என தெரிந்து கொண்டேனா என்றால் அது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளவில்லை.

2. மேற்படி உதவி ஆய்வாளர் சுல்தான் இப்ராஹிம் அவர்கள் என்னிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மாருதி ஆம்னி வேன் சேஸ் நம்பர் அழிக்கப்பட்டிருந்ததாக குறுக்கு விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். என்னிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கார் கைப்பற்றப்பட்டதாக ஏதேனும் ரசீது காவல் உதவி ஆய்வாளர் CRPC 51ன் படி அளித்துள்ளாரா என்றால் அவ்வாறு அளித்ததாக வழக்கு கோப்பில் இல்லை. கைது குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளர் சுல்தான் இப்ராஹிம் அவர்கள் புகார்தாரர் அண்ணாமலை அவர்கள் கொடுத்த புகாரில் கண்டுள்ள வாகனத்தை எதிரிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

3. CRPC 161 (3)ன் படி சாட்சிகளை விசாரணை செய்வதற்காக CRPC 160ன் படி அழைப்பாணை அனுப்பி உள்ளாரா என்றால் அவர்களாக வந்ததால் அழைப்பாணை அளிக்கவில்லை. சாட்சிகள் என்னிடம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட விபரங்கள் தெரியும் என உறுதிமொழி பத்திரம் பிரிவு 170(2) crpc இன் படி அளித்துள்ளார்களா என்றால் அவ்வாறு ஏதும் அளிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசரில் சூலூர் காவல் நிலைய வழக்கு எண்.945/2019 என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் உறுதி மொழி பத்திரம் அளிக்கவில்லை என்றும் ஆகவே வழக்கிற்காக போலீசார் எங்களால் தயாரிக்கப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:08:46 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**
**சூலூர்**